# கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஜுலை 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய இருந்த ரூபா 2,371,214 இற்கான பெறுமதி கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிர்மாணித்திருந்த திண்மக் கழிவுப்பொருள் நிலையத்தின் காவல் அறை நிர்மாணித்தல் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 314,168 இற்கான தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி வருமானம் ரூபா 121,236 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊழியர் கடன் பதிவேட்டின் கூட்டுத் தொகையில் காணப்பட்ட ரூபா 99,910 இற்கான குறைவினை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளது.

(உ) வாடகை அடிப்படையில் வழங்கியிருந்த வாகனங்களுக்காக கடந்த ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 261,975 இற்கான வருமானம் ஆண்டிற்கான வருமானம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 537,711 தொகைக்கான நிர்மாண வேலைகளின் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(எ) கடந்த ஆண்டுகளுக்கான நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 49,410 இற்கான மூலதனச் செலவுகள் ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) சபையின் வாகனங்களை பயன்படுத்தி மேற்கொண்டிருந்த பாதை திருத்த வேலைகள் தொடர்பாக செலவிடப்பட்டிருந்த ரூபா 112,293 இற்கான தொகை நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 2 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய பணம் ரூபா 91,342 தொகையினை மிகையாகவும் மற்றும் 4 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 121,636 தொகை குறைவாகவும் காட்டியிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்கான கடை வாடகை வருமானம் ரூபா 85,648 தொகை மிகையாக சிட்டை இடப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது கணக்குகளிடையே பணம் மாற்றப்பட்டதில் உருவாகிய ரூபா 513,447 இற்கான வரவு மீதியொன்று நடைமுறை சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,109,331 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள ரூபா 22,462,909 தொகை காணப்படுகின்ற 15 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடு/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 5,742,496 தொகையாகும்.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 3,517,545 தொகைக்கான நிர்மாணவேலை கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 389,051 தொகைக்கான 02 மீதிகள் அடங்கியிருந்தன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 3,166,381 தொகைகள் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 751,876 தொகைக்கான 07 மீதிகள் அடங்கியிருந்தன.

(ii) முன்னைய ஆண்டு முதல் முன்கொண்டுவந்து காணப்படும் பெறுமதி கூடிய வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 791,917 தொகைக்கான கூட்டுப்பெறுமதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 41,760,363 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 164 | சபையினால் கணக்கு ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் நாளாந்த பரிசோதனை செய்து அதற்காக குறுகிய கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனினும் அதற்கிணங்க செயற்பட்டி ருக்கவில்லை. |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் செலவு விடயங்களில் உள்ளவாறாக செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறை தொடர்பான காரணங்களுடன் கூற்றொன்று சமர்த்திருக்கவில்லை. |
| (ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட 1992 பெப்ரவரி 26 திகதிய 05/01/119/சix இலக்க அறிவுரை | திட்டமிடல் குழு கூட்டங்களின் கொடுப்பனவு செலுத்துவதற்காக 02 மணித்தியாளத்தை விட மிகையான காலம் கடமை நேரத்திற்கு வெளியே வேலை செய்ய வேண்டுமெனினும், அதற்கு இணைங்காத வகையில் ரூபா 24,000 தொகையொன்று 2017 திசெம்பர் 31 திகதி செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2014 திசெம்பர் 30 ஆம் திகதிய 03/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2015 அக்தோபர் 25 திகதிய 03(i)/2014 பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு பொருத்தமற்ற முறையில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூபா 21,242 இற்கான தொலைபேசி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,270,046 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,729,662 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,036,500 | 1,364,486 | 1,228,397 | 702,361 | 906,500 | 999,626 | 1,067,916 | 566,242 |
| வாடகை | 2,841,900 | 4,834,421 | 3,689,625 | 1,267,937 | 1,158,000 | 1,418,509 | 2,361,513 | 123,141 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 135,250 | 145,412 | 145,412 | 124,900 | 98,000 | 137,512 | 1,070,969 | 124,900 |
| ஏனைய வரு மானங்கள் | 4,758,500 | 6,788,274 | 8,608,683 | 5,053,713 | 3,597,500 | 8,402,134 | 3,319,268 | 6,874,122 |
| மொத்தம் | 8,772,150 | 13,132,593 | 13,672,087 | 7,148,911 | 5,760,000 | 10,957,781 | 7,819,666 | 7,688,405 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 8,772,150 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 13,132,593 ஆக காணப்பட்டது. ரூபா 7,688,405 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 20,820,998 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 13,672,087 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 7,148,911 ஆக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### (அ) வீதவரி

ஆரம்ப நிலுவை ரூபா 602,119 தொகையாக இருந்ததுடன், ரூபா 425,990 தொகைக்கான சிட்டையிடல் உடன் ரூபா 1,028,109 தொகை அறவிடவேண்டிய காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 419,899 தொகை காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 608,210 தொகை வரை நிலுவை மீதி அதிகரித்திருந்தது.

#### (ஆ) ஏக்கர் வரி

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 130,726 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 12,482 தொகையாக காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 10,598 தொகையாக காணப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 132,609 தொகை நிலுவையில் காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

ஆரம்ப நிலுவை ரூபா 164,783 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,336,663 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,501,446 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 1,306,013 ஆகக் காணப்படாமையினால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 195,433 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 207,450 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 7,955,594 தொகை ஆகக் காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை (out put) பெற்றுக்கொள்ளப்படாமை**

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 21 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்வதற்காக ரூபா 3,453,535 இற்கான தொகை ஒன்று அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டங்களுக்கான கருமங்கள் 2017 நவம்பர் 30 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு ரூபா 2,341,753 பெறுமதியான 15 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

அரச கட்டிடங்கள் ஆய்வு நிறுவனத்தினால் அறிவித்திருந்தவாறு சபையின் பின் புறத்தில் அமைந்துள்ள மலை நிலையற்றதாக காணப்பட்டதுடன், மண் சரிவிற்கு இலக்காகும் ஆபத்தான வலயத்தில் காணப்படுகின்றது என விதந்துரைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறந்த நிலையில் காணப்பட்ட வெட்டப்பட்ட மண்மேட்டை தயாரித்து உறுதிப்படுத்துவதற்கான விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஜனவரி 15 திகதி வரையும் குறிப்பிட்ட விடயம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பதவியணித் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகளில் 02 வெற்றிடங்கள் மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கையில் 15 மிகைகள் காணப்பட்டன.

(ii) அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணிகளை சேர்ந்த 03 முன்பள்ளி பெண் பொறுப்பாளர்கள் தொடர்பாக பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2014 திசெம்பர் 12 திகதி மற்றும் 25/2014 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) திறைசேரி செயலாளரின் 3/2014 முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் இணங்காத முறையில் 09 ஊழியர்களை சேர்க்கப்பட்டு 2014 ஆண்டு முதல் சபை நிதியத்தில் இருந்து சம்பளமாக ரூபா 4,304,241 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை**

சபைக்கு சொந்தமான 03 ஏக்கர் 01 ரூட் 1.1 பர்சஸ்களை கொண்ட 17 காணித் துண்டுகளின் பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4.2 விளைவற்ற / குறைபயன்படு சொத்துக்கள்

(அ) சபைக்கு சொந்தமான 02 ஏக்கர் 01 ரூட் 15.37 பர்சஸ்களைக் கொண்ட 08 காணித் துண்டுகள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) ரூபா 1,399,400 கிரயத்தை உடைய 03 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட போதிலும் அவற்றை பழுதுபார்த்து ஓட்டுவதற்கு, ஈடுபடுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2017 ஆண்டிற்காக பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயந்திர உபகரணங்களில் அடிப்படை பராமரிப்பிற்காக செலவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த பணத்தில் ரூபா 893,400 தொகை பெறுமதியான 32 டயர்கள் கொள்வனவு செய்திருந்தது. தேவையினை இனங்காணாமல் கொள்வனவு செய்திருந்தமையால் ரூபா 819,400 தொகை பெறுமதியான 26 டயர்கள் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. மேலும், 2013 ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த ரூபா 68,400 தொகை பெறுமதியான 06 டயர்கள் களஞ்சியத்தில் காணப்பட்டது ரூபா 364,200 தொகை பெறுமதியான 10 டயர்கள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானச் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 06 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 7,512,566 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 17 சதவீதம் முதல் 44 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 01 செலவு விடயத்தில் ரூபா 56,881 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், அப்பெறுமதி 43 சதவீதமாக காணப்பட்டது.

(இ) 02 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 3,213,400 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 13 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு அகக்க கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கலந்துரையாடியிருக்கவில்லை. அதே போல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு அனுப்பியிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு